(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 188.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2017 ஆகஸ்ட் 10 வியாழக்கிழமை, மு.ப. 10.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

67/ '15

கௌரவ புத்திக பத்திறன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கமத்தொழிலுக்கான விவசாய இரசாயனங்கள், உரப் பாவனை மற்றும் மனித செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் சுற்றாடல் அழிவினால் இலங்கையின் நீர் மூலங்கள் மாசடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையில் மக்களின் பாவனைக்கு பொருந்தாத நீரைக் கொண்ட ஆறுகள், வாவிகள் மற்றும் ஏனைய நீர் மூலங்கள் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், நீர் மாசடைந்துள்ள பிரதானமான நீர் மூலங்கள் யாவை என்பதையும்;

(iii) அந்த இடங்களை பாவனைக்கு உகந்த வகையில் துப்பரவு செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) எதிர்காலத்தில் நீர் மூலங்கள் மாசடைவதைத் தடுப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1072/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நிதி அமைச்சினால், வரி செலுத்தல் தொடர்பாக 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதத்தில் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களை பிரச்சாரம் செய்தல் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி அறிவித்தல்களின்,

(i) பிரச்சாரம் நிறுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) பிரச்சார நடவடிக்கைகளுக்கு ஒவ்வொரு ஊடக நிறுவனத்துக்கும் செலுத்தப்பட்ட தொகை வெவ்வேறாகவும் மொத்தமாகவும் எவ்வளவென்பதையும்;

(iii) வெளியிடுவதற்கு ஒதுக்கப்பட்ட நிதித் தொகையை ஊடக நிறுவனங் களுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கு பயன்படுத்திய அடிப்படை யாதென்பதையும்;

(iv) வெளியிடுவதற்கு தேவையான நிதியத்தை வழங்கிய அரச நிறுவனங்கள் மற்றும் ஒவ்வொரு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பங்களிப்பு வெவ்வேறாக யாவை என்பதையும்;

(v) வெளியிடுவதற்கு அமைச்சின் நிதி செலவிடப்பட்டிருப்பின், அதற்கென பயன்படுத்தப்பட்ட செலவினத் தலைப்புகள் யாவை என்பதையும்;

(vi) வெளியிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட விளம்பர முகவர் நிறுவனங்கள் மற்றும் ஒவ்வொரு நிறுவனத்துக்கும் வழங்கப்பட்ட தரகுப் பணத் தொகை மற்றும் கட்டணத் தொகை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vii) மேற்படி பிரச்சார முகவர் நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1120/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண சபையின் கீழ் மாகாண பொதுமனுக்கள் குழுவொன்று செயற்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அம்மாகாண பொது மனுக்கள் குழு உறுப்பினர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) தற்போதைய ஊவா மாகாண முதலமைச்சர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டதை அடுத்து இற்றைவரை இக்குழுவிற்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இற்றைவரை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை விசாரணை செய்து நிவாரணம் வழங்கப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) இக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள விதப்புரைகளை நடைமுறைப்படுத்தியுள்ள மற்றும் நடைமுறைப்படுத்தாத மாகாண அரச நிறுவனங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(vi) மேற்படி குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்தாத மாகாண அரச நிறுவனங்கள் சம்பந்தமாக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1196/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இலங்கை மின்சார சபையினால் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போதைக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 1984 முதல் 2009 ஆம் ஆண்டு வரை மின்சாரம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(iv) 2009 ஆம் ஆண்டில் யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலகட்டத்தில் மின்சாரம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1305/ '16

கௌரவ டலஸ் அழகப்பெரும,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை மாத்தறை மாவட்டத்தில் பதிவாகியுள்ள பெரும் குற்றச் செயல்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பொலிஸ் நிலையத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பெரும் குற்றச் செயல்களின் எண்ணிக்கை குற்றச் செயல்களின் எண்ணிக்கை, குற்றச் செயல்களின் தன்மைக்கு அயை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பெரும் செயல்கள் தொடர்பாக குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) குற்றச் செயல்கள் பற்றி அறிக்கையிடுகின்றபோது பின்பற்ற வேண்டிய ஊடக ஒழுக்க விழுமியங்கள் தொடர்பான ஒழுக்க நெறிக் கோவையொன்றை தயாரிப்பதன் தேவையை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அனைத்து தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒழுக்க நெறிக் கோவையொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) கடந்த ஆட்சிக்காலம் மற்றும் தற்போதைய ஆட்சிக்காலத்தில் இடம் பெற்றுள்ள குற்றச் செயல்களின் எண்ணிக்கை மற்றும் இயல்பை பார்க்கும் போது நிலவிய அல்லது நிலவுகின்ற ஆட்சியுடன் ஏதேனும் தொடர்புகள் இருப்பதாக நம்புகின்றாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

1411/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் 179 ஆம் இலக்க முன்மொழிவின் படி, இறக்குமதி செய்யப்பட்ட ஆபரணங்களுக்கு விதிக்கப்பட்ட 10% செஸ் வரியின் மூலம் திரட்டப்பட்ட மொத்த வரி வருமானம் எவ்வளவு;

(ii) குறிப்பட்ட செஸ் வரியை உள்நாட்டு கலைஞர்களை பேணுவதற்கு ஈடுபடுத்திய முறை யாது;

(iii) 1977 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை ஒவ்வொரு வருடத்திலும் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட ஆபரணங்களின் பெறுமதி மற்றும் பிரதான இறக்குமதியாளர்கள் 20 பேர்களின் பெயர்ப்பட்டியலை சமர்ப்பிப்பாரா;

(iv) இலங்கைக்கு ஆபரணங்கள் இறக்குமதி செய்யப்படுமாயின், அவற்றின் பிரதான வழங்குனர்கள் யாவர்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1496/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டிலும் வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் வட மத்திய மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணத் தொகைகள் தனித்தனியே யாது என்பதையும்;

(ii) மேற்படி மாகாண சபைகளினால் ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்ட பணத் தொகைகள் தனித்தனியே யாது என்பதையும்;

(iii) மேற்படி மாகாண சபைகளினால் செலவிடப்பட்ட பணத் தொகை, ஒதுக்கப்பட்ட பணத் தொகையின் சதவீதமாக தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1544/ '17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரத்தில் வசிக்கும், மூன்று பிள்ளைகளின் தாயான சுஜானி என்ற பெண் குவைட் நாட்டில் சேவையாற்றிய சமயம் மிக கொடூரமான முறையில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளாரென்பதையும்;

(ii) மேற்படி கொடூர சித்திரவதை காரணமாக முண்ணான் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, இவர் தற்சமயம் குவைட்டிலுள்ள அடான் வைத்தியசாலையில் 17 ஆம் வாட்டில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) முண்ணான் பாதிக்கப்பட்டமையால் முடங்கிய நிலையில் உள்ள இப்பெண் உடனடியாக இலங்கைக்கு அழைத்து வரப்படுதல் வேண்டுமென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இவருக்கு கிடைக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையுடன் உடனடியாக இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1573/ '17

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை, மனம்பிட்டிய மணல் தேவைக்கேற்ப, மணல் விநியோகமானது மனம்பிட்டிய மணல் கம்பனியினால் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை அறிவாரா;

(ii) மேற்படி கம்பனி அரசாங்கக் கம்பனியா; இன்றேல், பகுதியளவிலான அல்லது முழு அளவிலான தனியார் கம்பனியா;

(iii) மேற்படி கம்பனியின் பணிப்பாளர் சபையினர் யார்;

(iv) குறிப்பிட்ட கம்பனியினால் கேள்வியாளர்களுடைய மணல் தேவைக்கேற்ப மணல் விநியோகிக்கப்படும் முறையியல் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1592/ '17

கௌரவ அசோக் பிரியந்த,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் இயங்கி வரும் கமநல சேவை நிலைய ஆளுகைப் பிரதேசங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அந்த ஆளுகைப் பிரதேச நிலையங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படியான ஆளுகைப் பிரதேசம் ஒன்றிலிருந்து உர மானியத்திற்காக விண்ணப்பித்துள்ள விவசாயிகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iv) மேற்படி விவசாயிகளில் உர மானிய பணத்தொகையைப் பெற்றுக்கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) உர மானிய பணத்தொகை வழங்கப்படவிருக்கும் விவசாயிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(vi) இதுவரை உர மானிய பணத்தொகை கிடைக்காத விவசாயிகளுக்கு அத்தொகையை வழங்கவுள்ள திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

11.

1602/ '17

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அன்டே லெகோ பிரைவட் லிமிடெட் (Ante Leco (pvt) Ltd.) நிறுவனம் தொடர்பில் அரசாங்கத்துக்கு உள்ள உரிமை யாது;

(ii) மேற்படி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட நோக்கம் யாது;

(iii) மேற்படி நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ள மின் மானிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி நிறுவனத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(v) ஆரம்பம் முதல் குறிப்பிட்ட நிறுவனம் அடைந்துள்ள இலாபம் அல்லது நட்டம் ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

1605/ '17

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கெரவலபிட்டி பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கன எரிபொருள் எண்ணெய் (HFO) மூலம் தற்சமயம் இயங்கும் மின்னுற்பத்தி நிலையத்தை ஓராண்டுக்குள் நீர்ம இயற்கை வாயு (LNG) மூலம் இயங்க வைப்பதற்கு இணக்கப்பாடு காணப்பட்டதா என்பதையும்;

(ii) இவ்விணக்கப்பாடு முறிந்துள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி இணக்கப்பாடு முறிந்தமையால் இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி மின்னுற்பத்தி நிலையத்தினால் இலங்கை மின்சார சபைக்கு பெற்றுக் கொடுக்கப்படும் மின்சார அலகொன்றின் விலையை தீர்மானிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டுக்கு முரணாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதை அறிவாரா என்பதையும்;

(v) ஒப்பந்தத்தின் பிரகாரம் மின்சாரத்தை விநியோகிக்கும் நிறுவனம் செயற்படுவதை உறுதிபடுத்துவதற்கு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி இணக்கப்பாட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

1611/ '17

கௌரவ ஹேஷான் வித்தானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மகாவலி அதிகாரசபையின் வளவ வலயத்திற்குச் சொந்தமான காணிகளின் ஏக்கரளவு யாது;

(ii) இதில் மக்களுக்கு பகிர்ந்தளித்துள்ள காணிகளின் அளவு ஒவ்வொரு பிரிவுக்கிணங்கவும் வெவ்வேறாக யாது;

(iii) 50 ஏக்கருக்கு மேற்பட்ட கருத்திட்டங்களுக்காக வழங்கப்பட்டுள்ள காணிகள் பற்றிய விபரமொன்றைச் சமர்ப்பிப்பாரா;

(iv) மேலே (iii) இல் குறிப்பிட்டுள்ள காணிகள் அமைச்சரவை அங்கீகாரத்தின்பேரில் வழங்கப்பட்டனவா;

(v) இன்றேல் அக்காணிகள் வழங்கப்பட்ட முறையியல் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

1626/ '17

கௌரவ எஸ். சீ. முத்துகுமாரண,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்புத்தேகம வைத்தியசாலை, மத்திய மாகாண சபைக்குச் சொந்தமான அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள ஆதார வைத்தியசாலைகளில் ஒரு வைத்தியசாலையாகும் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அநுராதபுரம் மாவட்டத்தின் தம்புத்தேகம, கல்னேவ, ராஜாங்கனய, தலாவ, இப்பலோகம மற்றும் நொச்சியாகம ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளையும் மற்றும் வடமேல் மாகாணத்தின் மஹவ, கல்கமுவ மற்றும் மீகலாவ ஆகிய பிரதேசங்களையும் சேர்ந்த நோயாளிகள் இவ்வைத்தியசாலை யிலிருந்து சிகிச்சை பெறுகின்றனரென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையின் முதலாம் வாட்டில்/ திடீர் விபத்துக்கள் வாட்டில் சராசரியாக ஒரு நாளைக்கு சிகிச்சை பெறுகின்ற நோயாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வாட்டிலுள்ள கட்டில்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) நோயாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் பற்றி திருப்தியடைகின்றாரா என்பதையும்;

(iv) மேற்படி வைத்தியசாலைக்கு கடந்த ஆண்டில் புதிய வாட்டுத் தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) இற்றை வரை அதன் வேலைகள் முடிவடையாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(vi) புதிய கட்டடத்தின் வேலைகளை பூர்த்திசெய்து அதை திறந்து வைப்பதற்கு தலையீடு செய்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

1627/ '17

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு மற்றும் புதிப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2050 ஆம் ஆண்டில் இலங்கையின் மின்வலுத் தேவையில் 100% சூரிய சக்தி, காற்றுச் சக்தி உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க சக்தி மூலகங்களினுடாக பெற்றுக் கொள்ளப்படுமென தேசிய பத்திரிகைகளில் வெளியாகிய அறிக்கைகள் சரியானவையா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நோக்கமானது தேசிய வலுசக்தி கொள்கையுடன் எந்தளவிற்கு இணங்குகின்றதென்பதையும்;

(iii) குறிப்பிட்ட நோக்கத்தை அடையப்பெறுவதற்கு தங்களது அமைச்சினால் திட்டமிடப்பட்டுள்ள பணிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1\.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2016.03.08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 6.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 11.30 மணிக்கு 7(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2017, மார்ச்சு 08) [1].

* 2.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— மீள ஒப்படைத்தல் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் ரஷ்ய சம்மேளனத்திற்கும் இடையே மீள ஒப்படைத்தல் பொருத்தனை தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2017 யூன் 07 ஆம் திகதிய 2022/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— மீள ஒப்படைத்தல் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் உக்ரைனுக்கும் இடையே மீள ஒப்படைத்தல் பொருத்தனை தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2017 யூன் 02 ஆம் திகதிய 2021/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.07.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 52 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ், உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மே 31 ஆம் திகதிய 2021/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 41 ஆம் பிரிவின் கீழ், தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகள் தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 மே 05 ஆம் திகதிய 2017/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.07.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

உண்ணாட்டரசிறைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2013),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(C) பிரிவின் கீழ் 2016.09.06 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.01.26 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 12.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2012),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(C) பிரிவின் கீழ் 2017.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2012.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.03.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 13.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(C) பிரிவின் கீழ் 2017.05.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.26 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 14.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2011),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2016.12.10 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2011.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்ட இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் ஒருங்கிணைந்த நிதிநிலைக் கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கை ஆகியன அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 15.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— தேசிய சேமிப்பு வங்கியின் ஆண்டறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2015),— நிதிச் சட்டத்தின் 35(3) ஆம் உட்பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) ஆம் உட்பிரிவின் கீழ், 2017.01.24 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய சேமிப்பு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 16.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2015),— நிதிச்சட்டத்தின் 35(3) உட்பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) உட்பிரிவின் கீழ் 2017.01.25 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்டதும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 17.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— மக்கள் வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2015),— நிதிச் சட்டத்தின் 35(3) உட்பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) உட்பிரிவின் கீழ் 2017.03.08 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான மக்கள் வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 18.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) உட்பிரிவின் கீழ் 2017.03.21 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட சுயாதீன பட்டயக் கணக்காளர்களின் கருத்துக்கள் உள்ளடக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 19.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— அரச மருந்துக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் (2013),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2016.07.08 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான அரச மருந்துக் கூட்டுத்தாபன ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம், மனித சேமநலம் மற்றும் சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.07.04 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 20.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் (2013),— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவின் கீழ் 2016.07.21 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம், மனித சேமநலம் மற்றும் சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.07.04 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 21.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் (2013),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2016.08.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கு உட்படுத்தப்பட்ட அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம், மனித சேமநலம் மற்றும் சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.07.04 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 22.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆவது பிரிவின் கீழ், மருத்துவ உபகரணங்களின் விலை குறித்தல் தொடர்பாக சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 பெப்புருவரி 17 ஆம் திகதிய 2006/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 23.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 24.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 25.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 26.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 27.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ், நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மாச்சு 27 ஆம் திகதிய 2012/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

28.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.